**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 134/ 2010** நாள் 01.12.2023

வாசா.1, திருமதி. கிருஷ்ணவேணி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

என்னுடைய வழக்குப்படி வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது மாமனாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது மாமனார் பெருமாள்சாமிக்கு எனது கணவர், 1ம் பிரதிவாதி, செல்வராஜ், ஜோதி மற்றும் பாப்பா என்ற சரஸ்வதி ஆகியோர் வாரிசுகள் என்றால் பாப்பா என்ற சரஸ்வதி மட்டும் வாரிசு அல்ல. பாப்பா என்ற சரஸ்வதியின் பெற்றோர் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. அவர் எனது மச்சானின் மனைவி. 1ம் பிரதிவாதிக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் ஜீவா என்றால் சரிதான். அவரது ஒரே மகள் தவமணி என்றால் சரிதான்.1ம் பிரதிவாதியின் 2வது மனைவியின் பிள்ளைகள் தான் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். நான் சொல்லும் பாப்பா என்ற சரஸ்வதி 2 ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது கணவரின் உடன்பிறந்த சகோதரியின் பெயரும் பாப்பா என்ற சரஸ்வதி என்றால் சரியல்ல. செல்வராஜ் இறக்கும்வரை அவரது சகோதரி பாப்பா என்ற சரஸ்வதியுடன் இருந்தார் என்றால் சரியல்ல. செல்வராஜ் எங்களுடன் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். ஜோதி என்பவருக்கு எனது திருமணத்திற்கு முன்பு திருமணம் நடந்ததா அல்லது என் திருமணத்திற்கு பிறகு நடந்ததா என்றால் ஜோதிக்கு திருமணம் நடக்கும்போது நான் சிறுகுழந்தை அவரது திருமணம் எப்போது நடந்தது என்று எனக்கு தெரியாது. ஜோதிக்கு எத்தனை சவரன் நகை போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மாமனார் பெருமாள்சாமியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது கணவர் இறந்து 3 வருடங்கள் பிறகு என் மாமனார் இறந்தார் என்றால் சரிதான். 5 வருடங்கள் கூட இருக்கலாம். எனது மாமனார் மற்றும் கணவரின் இறப்பு சான்றிதழ்கள் என்னிடம் உள்ளன. எனது மாமனார் உயிருடன் இருக்கும்போதே 1986ம் வருடம் அவரது சொத்துக்களை 3 பிள்ளைகளுக்கும் பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மாமனார் எனது கணவருக்கு 4 ஏக்கர் நிலம் பிரித்து கொடுத்தார் என்றால் இல்லை. பொதுவாக தான் இருந்தது. 4 ஏக்கர் ஆனால் கொடுத்துள்ளார். அந்த 4 ஏக்கர் நிலத்திற்கு எனது கணவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் இல்லை. மாமனார் பெயரில்தான் உள்ளது. எனது கணவர் பெயர் தர்மராஜ் என்றால் சரிதான். எனது கணவரின் பெயரில் உள்ள பட்டாவை வாசாஆ–3ல் ஒரு பட்டாவாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாச்சியார்பட்டியில் கதவு எண் 26A வீடு என் கணவருக்கு ஒதுக்கப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கு வரி விதிப்பு என் பெயரில் உள்ளது என்றால்

(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

சரிதான். அந்த வீட்டின் கதவு எண் தற்போது 46 என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு என் பெயரில் பட்டா உள்ளது என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு கதவு எண் 49 ஒதுக்கப்பட்டு 1ம் பிரதிவாதி அந்த வீட்டில் வசித்து வந்தார் என்றால் இல்லை. அவர்அவர் வீடுகளில் வசிக்கிறார்கள் தனியாக ஒதுக்கப்படவில்லை. அந்த வீட்டின் பழைய எண் 34 என்றால் எனக்கு தெரியாது. மாட்டுதொழுவத்தின் கதவு எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. 25 ஏக்கரில் நான் எத்தனை ஏக்கர் அனுபவித்து வருகிறேன் என்றால் 4 ஏக்கர் மீதமுள்ள சொத்தை யார் அனுபவிக்கிறார்கள் என்றால் பொதுவாகத்தான் இருக்கிறது. மீதமுள்ள 21 ஏக்கர் பொதுவாக இருப்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த சொத்துக்களுக்கு பாகம் கேட்டுள்ளேன் என்றால் மல்லியில் 3 1/2 ஏக்கர், அதற்குபட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் மாமனார் பெயரில் உள்ளது அந்த பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரெகுநாதபுரத்தில் 5 ஏக்கர் உள்ளது. அதற்குபட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் மாமனார் பெயரில் உள்ளது அந்த பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அச்சம்தவிர்த்தான் கிராமத்தில் சொத்து உள்ளது. அதன் விஸ்தீரணம் தெரியாது. அதற்குபட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் மாமனார் பெயரில் உள்ளது அந்த பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அயன்நாச்சியார்கோவில் கிராமத்தில் 3 இடங்களில் சொத்து உள்ளது. அவை முறையை 2 1/2 ஏக்கர் , 2 1/2 ஏக்கர் மற்றும் 1 3/4 ஏக்கர். அதற்குபட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் மாமனார் பெயரில் உள்ளது அந்த பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அச்சம்தவிர்த்தான் கிராமத்தில் உள்ள சொத்திற்கு என் கணவர் பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாச்சியார்பட்டியில் 20 சென்டு இடம் பள்ளிக்கூடத்திற்கு பின்னால் உள்ளது. அதுபோக மாட்டுதொழுவு உள்ளது. மேற்படி 20 செண்ட் நிலத்தை சொத்து விவரத்தில் காட்டவில்லை என்றால் சரிதான். வாசாஆ-3 தவிர வழக்கு சொத்துக்கள் பொறுத்து வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கந்தசாமி நாயக்கர் மகன் பெருமாள்சாமி நாயக்கர் யார் என்றால் எனது மாமனார் தந்தை பெயர் வெங்கடசாமி. எனது மாமனார் பெருமாள்சாமிக்கு கிருஷ்ணசாமி என்ற மகன் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ-3ல் உள்ள பட்டா எண் 1927ல் பெருமாள்சாமி மகன் கிருஷ்ணசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் உள்ளது என்னுடைய கையெழுத்தா என்றால் வழக்கு தாக்கல் செய்யும்போது போட்டு இருப்பேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளது என் கையொப்பம் அல்ல. 1986ல் எனது மாமனார் 2 காளைமாடு, 2 எருமை மாடு, மாட்டுவண்டி ஆகியவை மற்றும் விவசாய நிலங்கள் கொடுத்தார் என்றாலும் அதை ஒப்புக்கொண்டு நான்

(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

பஞ்சாயத்தார் முன்னிலையில் சம்மத ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் ராமசாமிநாயக்கர் மகன் ராமசாமிநாயக்கர் , நல்லையா நாயக்கர் மகன் ராமசாமி, சங்கமநாயக்கர் மகன் நடராஜன் லிங்கசாமி நாயக்கர் மகன் வேணுகோபால், கிருஷ்ணசாமி நாயக்கர் மகன் சீனிவாசன் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது. 1986ம் வருடம் எனது மாமனாருக்கும் செல்வராஜ்க்கும் ஜீவனாம்சமாக ரூபாய் 4 ஆயிரம் கொடுத்தேன் என்றால் இல்லை. 1986ல் நடந்த பாகத்தில் அயன்நாச்சியார்கோவில் கிராமத்தில் சர்வே எண் 239 ஒரு ஏக்கர் 77 செண்ட் அச்சம்தவிர்த்தன் கிராமத்தில் சர்வே எண் 504/1A 2 ஏக்கர் 40 செண்டில் 1 ஏக்கர் 20 செண்டில் கீழ்பக்கம் 60 செண்ட் , அயன்நாச்சியார்கோவில் கிராமத்தில் சர்வே எண் 241ல் 76 செண்டும் அச்சம்தவிர்த்தான் கிராமத்தில் சர்வே எண் 1195ல் 1 ஏக்கர் 71 செண்டில் கிணற்றுக்கு மேல்புறம் 60 செண்ட் அதே கிராமத்தில் சர்வே எண் 60 மற்றும் 61/1 ஏக்கர் 2 செண்ட் 66ல் கீழகடைசியில் 44 1/3 செண்ட் , அதே கிராமத்தில் 505/2 44 செண்ட், மாட்டுகொட்டத்தில் 4ல் 1 பங்கும் கதவு எண் 7/19 A வீடும் மேற்படி நிலங்களுக்கு பாத்தியப்பட்ட கிணற்று பாத்தியமும் ஆகிய சொத்துக்களை என் பிள்ளைகள் மேஜராகும்வரை விற்கமாட்டேன் என்றும் அவர்கள் மேஜரான பிறகு அவர்களிடம் சொத்துக்களை ஒப்படைப்பேன் என்றும் எழுதிகொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல 1 ம்பிரதிவாதி பாகத்திற்கு ரெகுநாதபுரம் கிராமத்தில் சர்வே எண் 69/2ல் 56 செண்டும் , 65/2ல் 1 ஏக்கர் 65 செண்டும், அயன்நாச்சியார்கோவில் கிராமத்தில் சர்வே எண் 335/5ல் 55 செண்டும் , சர்வே எண் 494/4ல் 30 செண்டும், அச்சம்தவிர்த்தான் கிராமத்தில் சர்வே எண் 1192/1ல் 48 செண்டும், 1193/4ல் 53 செண்டும் , சர்வே எண் 505/1 B ல் 88 செண்டும், சர்வே எண் 1193/1A, 1195/1A, 505/1A, ஆகிய சர்வே எண்களில் உள்ள கிணறுகளில் 3ல் 1பாகமும் பழைய கதவு எண் 34க்கு புதிய கதவு எண் 49 ல் வீடும் ஒதுக்கப்பட்டு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு வரி செலுத்தி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அதே போல செல்வராஜ் பாகத்திற்கு அயன்நாச்சியார்கோவில் கிராமத்தில் சர்வே எண் 494/4ல் 58 செண்டும், சர்வே எண் 262/1A ல் , 1 ஏக்கர் 91 செண்டும், சர்வே எண் 322/4ல் 16 செண்டும், சர்வே எண் 322/10 3 செண்டும், அச்சம்தவிர்த்தான் கிராமத்தில் சர்வே எண் 504/1A1 0.44 செண்டும், சர்வே எண் 1195/1 ல் 1 ஏக்கர், சர்வே எண் 1195/3C1 0.64 செண்டும், சர்வே எண் 1192ல் 2 ஏக்கர் 20 செண்டும், சர்வே எண் 1193ல் 2 ஏக்கர் 6 செண்டும், சர்வே எண் 1195 /1A, 1194/1A, 1195/2, 1195/3A ஆகிய நிலங்களில் உள்ள கிணற்றில் பிரிவினையில்லாத பாத்தியமும் அதுபோக நாச்சியார்பட்டி கிராமத்தில் சர்வே எண் 322/13ல் 2 1/2 செண்டில் பிரிவினையில்லாத 3 ல் 1பங்கு படப்படிமனை ஆகியவை

(ஒம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

ஒதுக்கப்பட்டன என்றால் சரியல்ல. செல்வராஜ்க்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான்.ரெங்கசாமி மனைவி சரஸ்வதி யார் என்றால் என் நாத்தனார். அவர் என் கணவரின் உடன்பிறந்தவர் என்றால் சரிதான். மேற்படி சரஸ்வதிக்கு பிரபு என்று ஒரு மகனும் , ஒரு மகளும் உள்ளார்கள் என்றால் சரிதான். செல்வராஜ் அவருடைய பாகத்தை பொறுத்து 6.11.1989 ல் தனது சகோதரி சரஸ்வதி பெயருக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி சரஸ்வதி காலமான பிறகு அவரது கணவரான ரெங்கசாமி மகன் பிரபு மற்றும் மகள் ஆகியோர் சேர்ந்து 3 ம் பிரதிவாதிக்கு 03.08.2009 ல் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி பெயருக்கு மேற்படி சொத்திற்கு பட்டா மாறிவிட்டது என்றாலும் அவர்தான் மேற்படி சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களில் 1வது தபசில் சொத்து எங்கள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றாலும் 2 வது தபசில் 1வது அயிட்டம் சொத்து ஜானகிராமன் , கிருஷ்ணசாமி 1ம் பிரதிவாதி ஆகியோர் பெயரில் கூட்டுபட்டா இருந்ததால் அதன்அடிப்படையில் அவர்கள் மூவரும் சேர்ந்து 15.02.2010 ல் 3 வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 4 வது தபசில் சொத்து முழுவதும் குடும்ப பாகத்தில் எனது மாமனார் இருக்கும்போதே 1வது பிரதிவாதியின் முதல் மனைவியின் மகளான தவமணிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. 5வது தபசில் 1வது அயிட்டம் சொத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 6வது தபசில் சொத்து வீடு 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு அவர் உயிருடன் இருந்தபோதே அவரது மகன் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 7வது தபசில் சொத்து மட்டும்தான் பொதுவாக பிரிக்கப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. எங்களுக்கு 7வது தபசில் சொத்து பொறுத்து மட்டும்தான் பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. பிற இன சொத்துக்களை நாங்களும் பிரதிவாதிகளும் சேர்ந்து அனுபவித்து வருவதை காட்டுவதற்கு அடங்கல் , 10(1)பட்டா, தீர்வை ரசீது ஆகியவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கை 1 முதல் 6 தபசில் சொத்துக்களை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 01st day of December 2023.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூா்.